**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16 ஆம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.03/2025 மற்றும் 04/2025**

in

**அசல் வழக்கு எண்.174/2020**

சண்முகத்தாய் ....மனுதாரர்/வாதி

/எதிர்/

வேல்ராஜ் ....எதிர்மனுதார்/பிரதிவாதி

இம்மனுக்களானது 11.09.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சுந்தரேசன் அவர்கள் ஆஜராகியும், மனுக்கள், எதிருரைகள், அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் மற்றும் இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**பொதுவான உத்தரவு**

மனுதாரரால் இம்மனுக்களானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் கட்டளை 7 விதி 14 மற்றும் பிரிவு 151–ன் கீழ், இவ்வழக்கில் பிராதுடன் தாக்கல் செய்துள்ள 6 வது ஆவணமான 22.11.2007 தேதியில் பிரதிவாதி கிரையம் பெற்ற சீர்திருத்த ஆவணத்தின் சார்பதிவாளர் நகலை சான்றாவணமாக தாக்கல் செய்து கொள்ள, வா.சா.1 ஆன மனுதாரர்/வாதியை ரீ–கால் செய்து முதல்நிலை சாட்சிய விசாரணை தொடர்ச்சிக்கு வாய்தா ஏற்படுத்தி உத்தரவிடவேண்டியும், மனுவில் கண்ட பிராதுடன் தாக்கல் செய்துள்ள 6 வது ஆவணமான 22.11.2007 தேதியில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.10.16 17:55:00 +0530

பிரதிவாதி கிரையம் பெற்ற பதிவு சீர்திருத்த ஆவணத்தின் சார்பதிவாளர் நகலை முன்னமே தாக்கல் செய்யாததினால் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ரிசிவ் செய்து கொள்ள உத்தரவிடவேண்டியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**1) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.03/2025 மற்றும் 04/2025–ன் மனுக்களின் சுருக்கம்:–**

இம்மனுக்களின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், இவ்வழக்கு வா.சா.1 ஆன மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கு பிராதுடன் 22.11.2007 தேதியில் பிரதிவாதி கிரையம் பெற்ற சீர்திருத்த ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை 6 வது ஆவணமாக தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் வா.சா.1 ஆக முதல்நிலை சாட்சியம் அளித்தபோது மனுதாரரால் மேற்படி ஆவணத்திற்கு சார்பதிவாளர் அலுவலக நகல் எடுத்து தாக்கல் செய்ய தவறிவிட்டது என்றும், தற்போது மேற்படி ஆவணத்திற்கு மேலநீலிதநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நகல் எடுத்துள்ளதை வா.சா.1 ஆன மனுதாரரை மீண்டும் விசாரணை செய்து சான்றாவணமாக குறியீடு செய்து தாக்கல் செய்து கொள்ள அனுமதியளிக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், மேற்படி ஆவணம் மனுதாரரின் கட்சியை நிரூபிக்க தேவைப்படும் முக்கிய நல்ல சாட்சிய சான்றாவணமாகும் என்றும், ஆகையால் இவ்வழக்கில் பிராதுடன் தாக்கல் செய்துள்ள 6 வது ஆவணமான 22.11.2007 தேதியில் பிரதிவாதி கிரையம் பெற்ற சீர்திருத்த ஆவணத்தின் சார்பதிவாளர் நகலை சான்றாவணமாக தாக்கல் செய்து கொள்ள, வா.சா.1 ஆன மனுதாரர்/வாதியை ரீ–கால் செய்து முதல்நிலை சாட்சிய விசாரணை தொடர்ச்சிக்கு வாய்தா ஏற்படுத்தி உத்தரவிடவேண்டியும், மனுவில் கண்ட பிராதுடன் தாக்கல் செய்துள்ள 6 வது ஆவணமான 22.11.2007 தேதியில் பிரதிவாதி கிரையம் பெற்ற பதிவு சீர்திருத்த ஆவணத்தின் சார்பதிவாளர் நகலை முன்னமே தாக்கல் செய்யாததினால் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ரிசிவ் செய்து கொள்ள உத்தரவிடவேண்டியும் இம்மனுக்கள் மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.10.16 17:55:08 +0530

2) **<u>எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகளின் சுருக்கம்:</u>**-

மனுதாரரின் மனுக்கள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரர் தன் மனுவில் ஏதோ மனுதாரர் தரப்பு விசாரணையில் மனுதாரர் தரப்பு ஆவணங்கள் ஆஜர் செய்ய வேண்டும் என கூறியிருப்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும் என்றும், மனுதாரர் தரப்பில் விசாரணைக்காக பல வாய்தாக்கள் இந்நீதிமன்றம் வாய்ப்பு அளித்திருந்தும் வேண்டுமென்றே இருந்துவிட்டு தற்போது மீண்டும் மனு தாக்கல் செய்திருப்பது எதிர்மனுதாரரை கஷ்ட, நஷ்டப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும், மேற்படி வழக்கை காலம் கடத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் மனுதாரர் செயல்படுகிறார் என்றும், எனவே மனுதாரரின் இம்மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகள், அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) அசல் வழக்கானது பிராதின் 7 வது தபசில் சொத்து உபயவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொதுநடைபாதை என விளம்புகை செய்து அதற்கு அனுசரணையாக பிராதின் 7 வது தபசில் பொதுநடைபாதையின் வழியாக வாதி எப்போதும்போல் பிராதின் 4 வது தபசில் சொத்திற்கு சென்றுபோய் வந்துகொள்வதற்கு பிரதிவாதி இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு வழங்கக்கோரியும், பிராதின் 7 வது தபசில் தென்வடல் பொதுநடைபாதையில் பிரதிவாதி நூதனமாக கட்டியுள்ள பிராதின் 8 வது தபசில் கட்டுமானங்களை இந்நீதிமன்றம் நிர்ணயிக்கும் ஓர் தினத்திற்குள் பிரதிவாதி அவர் செலவில் இடித்து அப்புறப்படுத்திப்போகும்படிக்கும் தவறும்பட்சத்தில் வாதியே

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.10.16 17:55:15 +0530

பிரதிவாதியின் செலவில் இந்நீதிமன்றம் மூலம் இடித்து அப்புறப்படுத்திப்போகும் வகையில் மேற்படியாருக்கு எதிரில் ஒரு வலியுறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கக்கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு மனுதாரர்/வாதியின் சாட்சியான வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்/வாதியால் இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

7) மனுதாரரால் இ.ம.எண்.04/2025 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 22.11.2007 தேதியில் பிரதிவாதி கிரையம் பெற்ற பதிவு சீர்திருத்த ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் ஆவணம் காலதாமதமாக தற்பொழுது வழக்கானது வாதி தரப்பு குறுக்கு விசாரணை சாட்சியத்திற்காக ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது. மேற்படி ஆவணத்தை வழக்கு விசாரணையின்போது விரைந்து தாக்கல் செய்யாததற்கு எவ்வித விளக்கமும் மனுதாரர் தரப்பில் இம்மனுவில் தெரிவிக்கப்படவில்லை.

8) மேலும், இம்மனுக்களின் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தரப்பில் விசாரணைக்காக பல வாய்தாக்கள் இந்நீதிமன்றம் வாய்ப்பு அளித்திருந்தும் வேண்டுமென்றே இருந்துவிட்டு தற்போது மீண்டும் மனு தாக்கல் செய்திருப்பது எதிர்மனுதாரரை கஷ்ட, நஷ்டப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும், மேற்படி வழக்கை காலம் கடத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் மனுதாரர் செயல்படுகிறார் என இம்மனுக்களுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுக்களுக்கு "Allowed on Cost" என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

9) அசல் வழக்கானது விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் வலியுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டிருப்பதால்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.10.16 17:55:22 +0530

மனுதாரரால் இ.ம.எண்.04/2025 உடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம், அசல் வழக்கின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கு அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

10) ஆகையால், வா.சா.1–ஐ திரும்ப அழைக்க அனுமதித்து, மனுதாரர் தரப்பில் இ.ம.எண்.04/2025 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணமானது நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

11) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து இம்மனுக்களானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படத்தக்கது என்று இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

<u>12) இறுதியாக</u>

<u>இ.ம.எண்.03/2025</u>

இம்மனுவானது ரூ.250/– (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை எதிர்மனுதாரருக்கு நேரடியாக 04.11.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 04.11.2025.

<u>இ.ம.எண்.04/2025</u>

இம்மனுவானது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்கு (Subject to Proof and Relevancy) ரூ.250/– (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை எதிர்மனுதாரருக்கு நேரடியாக 04.11.2025ம் தேதிக்குள் செலுத்த

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.10.16 17:55:29 +0530

வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 04.11.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.10.16 17:55:35 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :-

- இல்லை -

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.10.16 17:55:41 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

I.A.No.03/2025, IA 04/2025
in
O.S.No.174/2020

உத்தரவு (Draft / Fair)

நாள் : 16.10.2025